ஐ.நா,மனித உரிமைக் குழுவின் 44 அமர்வின் உறுப்பினர்களுக்கும்,
பார்வையாளர்களுக்கும்,
புலிகளிடமிருந்து
24 மாசி 1988

அன்பான பிரதிநிதிகளே,

ஐ.நா தலைமையகத்துக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் நாங்கள் ஜெனிவா உடன்படிக்கையின் 49 ம் ஆண்டின் 1 4 வரையான உடன்படிக்கைகளையும் மேலதிக சேர்க்கைகளான 1,2 என்பவற்றையும் ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கிறோம்.

இதே நாளில், யுத்த நிறுத்தம் செய்யவும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவும் இந்திய பிரதமரான ராஜீவ் காந்திக்கு புதிய வேண்டுகோள் ஒன்றை விடுக்கிறோம். தமிழ் மக்களின் கௌரவம், பாதுகாப்பு, நலன்கள் என்பவற்றைப் பாதுகாப்பதற்காக இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்த இந்திய அரசுடன் ஒத்துழைப்பதாக உறுதியளிக்கிறோம்.

இம்மாநாட்டின் உறுப்பினர்கள், பின்வரும் விடயங்களில் தீர்வு காண யுத்த நிறுத்தம் செய்யவும் பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பிக்க இந்தியாவை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

1.ஆயுத ஒப்படைப்பு

2,தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளை நிறைவேற்றல்

எங்களுக்கும் இந்திய அரசுக்கும் தமிழ் மக்களின் துயரங்களை குறைக்க உதவி செய்யும்படியும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

உங்கள் உண்மையுள்ள
வே.பிரபாகரன்

தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகள்